P. R. No: 63 Date: 30-10-2017

# பத்திரிக்கை செய்தி

கந்து வட்டி வசூலிப்பது தமிழ்நாடு அதிக வட்டி வசூலித்தல் தடுப்புச்சட்டம் 2003 ன் படி குற்றமாகும். இதில் தினசரி வட்டி, மணி நேர வட்டி, கந்து வட்டி, மீட்டர் வட்டி, தண்டல் ஆகியவை அடங்கும். இவ்வாறு வட்டி வசூலிப்பது மேற்படி சட்டப்பிரிவு 4ன் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகும்.

மேற்படி கந்து வட்டி வசூலிப்பவர்கள் குறித்த புகார்கள் பெறும் முகாம் கீழ்க்கண்ட நாட்களில் அதற்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காவல் உட்கோட்டங்களில் நீலகிரி மாவட்ட குற்றப்பிரிவு அதிகாரிகளால் நடத்தப்பட உள்ளது. இதனை பொதுமக்கள் உபயோகப்படுத்தி கொண்டு புகார்களை நேரடியாக தெரிவிக்கலாம் என நீலகிரி மாவட்ட காவல்துறையின் சார்பில் தெரிவிக்கப்படுகிறது.

| வ. எண் | முகாம் நடைபெறும் உட்கோட்டம் | இடம் | நாள் |
|---|---|---|---|
| 1 | கூடலூர் காவல் உட்கோட்டம் | ஜானகி அம்மாள் கல்யாணமண்டபம், கூடலூர். | 31.10.17 |
| 2 | தேவாலா காவல் உட்கோட்டம் | வணிக வளாகம் முன்பு, பந்தலூர் | 01.11.17 |
| 3 | உதகை நகரம் மற்றும் ஊரக காவல் உட்கோட்டம் | உதகை சேரங்கிராஸ் அருகே உள்ள புற காவல் நிலையம் | 02.11.17 |
| 4 | குன்னூர் காவல் உட்கோட்டம் (குன்னூர் மற்றும் கோத்தகிரி உட்பட) | குன்னூர் பேருந்து நிலையம் அருகே உள்ள புற காவல் நிலையம் | 03.11.17 |

அவ்வாறு முகாமிற்கு வர இயலாதவர்கள் தங்களது கிராமத்திற்கு சம்மந்தப்பட்ட காவல் நிலையங்களில் புகார்களை எழுத்துமூலமாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. அது தவிர கந்து வட்டி சம்மந்தமான புகார்களை நீலகிரி மாவட்ட தனிப்பிரிவு அலுவலக தொலைபேசி எண் : 0423-2223828, கைப்பேசி எண் 8608000100 மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலக தொலைபேசி எண்: 0423-2444012 ஆகிய தொலைபேசிகளில் தெரிவிக்கலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

காவல் கண்காணிப்பாளர்,
For நீலகிரி மாவட்டம்.
30/10/17